**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV ,BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.733/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 3 |
| Name | : | ராமசந்திரன், வயது 54 |
| Father Name/Husband Name | : | செல்லையா |
| Village | : | லிங்கம்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of February 2026.

**(A1 – A3 present. A4 absent. 355 BNSS petition filed and allowed ).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது லிங்கம்பட்டியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் இல்லாத 4 வது எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 எனது மகன். கடந்த 01.04.2025 ஆம் தேதி இரவு 12.30 மணிக்கு எனது வீட்டிற்கு முன்பு நான்கு எதிரிகளும் எனது மகனை அடித்தார்கள். எனது மகன் இரத்த காயத்துடன் வந்தார். நான் எனது மகனை ஓடி போய் பிடித்ததற்கு என்னை பிடிக்க விடவில்லை. நான் பிடிக்க முயற்சித்தபோது 1 வது எதிரி எனது மகனை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன், வைக்காமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். பின்பு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தோம். பின்பு நாங்கள் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். ஒரு எதிரி பனைமட்டை, ஒரு எதிரி அரிவாள், ஒரு எதிரி லைட் பட்டை வைத்து அ.சா.1 யை அடித்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2 நானும், எனது மகனும்தான் கொத்த வேலை பார்க்கிறோம். எனது மகன் வேலைபளு காரணமாக மது அருந்துவது பழக்கம் என்றால்

சரிதான், என்னிடமும், எனது மனைவியுடனும் சண்டை போடுவார். சம்பவத்தின்போது அ.சா.1 மது அருந்ததினார் என்றால் சரிதான். எனது மகன் மதுபோதையில் பிரச்சனை செய்வதால் நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் இனிமேல் பிரச்சனை செய்யகூடாது என்று அறிவுறுத்தப்பட்டது என்றால் சரிதான். மேலும் எங்கள் ஊர் தலைவர் எனது மகனுக்கு வேண்டி காவல் நிலையத்தில் சமாதானம் பேசியிருந்தார் என்றால் சரிதான்.

3 சம்பவ சமயத்தில் எனது மகன் வீட்டை விட்டு இரவு 10.00 மணிக்கு வெளியே சென்றாரா என்றால் சரிதான், எனது சித்தி வீட்டுக்கு போய் விட்டு வரும்போது அடித்தார்கள். நான் வீட்டிலிருந்து போகும்போது மணி இரவு 11.30 இருக்குமா என்றால் இருக்கும். எனது மகன் இரத்தத்துடன் வரும்போதுதான் சம்பவம் குறித்து எனக்கு தெரியும் என்றால் எனது மகன் இரத்தத்துடன் வந்த பிறகு எனது மகனின் காலில் எதிரிகள் அடித்தார்கள். இரவு 10.00 – 11.30 மணி வரை என்ன நடைபெற்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 யை தேடி போன பிறகுதான் நான் நடந்ததை பார்த்தேன்.

4 இரவு 10.00 – 11.30 மணி சம்பவம் எங்கு வைத்து நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்தவுடன் எனது மகன் மயங்கி விழுந்து விட்டார் என்றால் ஒரு மாதிரியாக இருந்தார். அதனால் மறுநாள்தான் எனது மகனுக்கு சுய நினைவு வந்ததது என்றால் சரிதான். அதனால் நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் நானும், எனது மனைவியும் எழுத்து மூலமாக புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். நான் கொடுத்த எழுத்து மூலமான புகாரின் அடிப்படையில்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகாரில் எனது மகன் இரவு 10.00 – 11.30 மணிக்கு வெளியில் சென்ற விவரத்தை சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்தில் வலது கால் முட்டியில் எனக்கு காயம் ஏற்பட்டது. நானும் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அங்கு மருத்துவர் என்னை பார்வையிட்டு எனது காயங்களை குறித்து கொண்டார். எனக்கு ஏற்பட்ட காயத்தை எனது காயச்சான்றில் பார்த்தால் துலங்கும் என்றால் சரிதான்.

5 இந்த வழக்கு சம்பந்தமாக எனது மனைவியின் இடது கை தோள் பட்டையின் பின்பகுதியில் காயம் ஏற்பட்டது. எனது மனைவியும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். எனது காயச்சான்றுகளையும், எனது மனைவியின் காயச்சான்றுகளையும் போலீசார் விசாரித்து வாங்கி சென்றார்கள். எனது மகனுக்கு ஏற்பட்ட காயம் அவர் அதிக போதையால் கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது மகன் மீது பொதுதொல்லை கொடுத்ததால் ஊர்காரர்கள் மற்றும் எதிரிகள் அடிக்கடி காவல் நிலையத்தில் புகார்

கொடுத்ததை மனதில் வைத்து எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.